Date: 15.03.22                                    C.C.No. 189 /2020

அ.சா.1 பாண்டியம்மாள் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். நானும் 1-வது எதிரியும் ஒரே ஊரைச்சேர்ந்த வெவ்வேறு சமூகத்தினா என்றால் சரிதான். ஒரே ஊர் என்பதால் 1-வது எதிரியின் குடும்பம் பிள்ளைகள் பற்றி தெரியும் என்றால் தெரியாது. என்னை சிங்கம்புணரியில் திருமணம் செய்துகொடுத்து ஒரு பையன் இருக்கிறார் என்றால் இல்லை. அ.சா.4 என் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான், மற்ற சாட்சிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என்னுடைய குடும்பத்தார்கள் நான், லதா, அய்யனார், பழனியம்மாள், அழகேசன் உள்ளிட்டோர்மீது 1-வது எதிரியை அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும்,அதில் அவருக்கு வலதுகையில் எலும்புமுறிவு ஏற்பட்டதாகவும் கொட்டாம்பட்டி காவல நிலைய குற்ற எண்.204-16 ஆக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு நான் சக்திவேலிடமிருந்து 3 லட்சம் ரூபாய் சிறுக சிறுக வாங்கியதை அவர் திருப்பிக்கேட்டதால் ஏற்பட்டது என்றால் என்னுடைய நகையைதான் அவர் வாங்கியிருந்தார். சக்திவேலுக்கு காத்தம்மாள் என்ற மனைவியும், ஹேமமாலினி என் மகளும் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது தெரியும், முன்பு தெரியாது. முன்பே தெரியும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய புகாரை நான் எழுதினேனா என்றால் ஓரளவிற்கு நான் எழுதினேன், மற்றதை அருகிலிருந்தவர்கள் எழுதிக்கொடுத்தார்கள். வழக்கு சம்பவம் கொட்டாம்பட்டி காவல் நிலைய வாசலில் என்று சொல்லியுள்ளேன், ஆனால் ஏன் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் காவல் நிலையத்திற்கு சற்று தள்ளிதான் சம்பபவம் நடந்தது. கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு சம்பவம் நடந்ததால் அதில் என் உறவினர்களும் உடன் இருந்தார்களா என்றால் கையெழுத்து செய்யும்போது உடனிருந்தார்கள், வெளியே போகும்போது தனி தனியாக சென்றுவிட்டோம். புகார் கொடுத்த உடன் என்னை போலீசார் விசாரித்தனரா என்றால் உடனே ஊருக்கு வந்து விசாரித்தனர். காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்ததற்கு உடனே விசாரித்தனர். நான் என்னென்ன நகைகளை கொடுத்தேன் என்றால் செயின், நெக்லஸ், தோடு மாட்டல், 2 மோதிரம் கொடுத்தேன். எந்தெந்த நகைகள் என்று என் புகாரில் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் 9 பவுன் என்றும் மொத்தமாகவும், குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் என் புகாரில் சொல்லியுள்ள சாந்தி பழனியம்மாள் ஆகியோர் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சாந்திக்கு திருமணமாகி முருகன் அவரது கணவர் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது நான் தற்போது சொன்ன விசயங்களைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் குண்ணங்குடிப்பட்டியில் வைத்து விசாரித்தனர்.நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எங்கள்மீது எதிரி கொடுத்த புகாரை திரும்ப பெறுவதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால்சரியல்ல.